FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301633

1. District : Madurai PS: VFAC Year: 2026 FIR No.: 11/2026 Date: 28.08.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7, 7A of PC Act 1988 as
(ii) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: amended by the PC
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018 and Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
BNSS Act. 106 BNSS
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.08.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 15.15 hrs Time to : 21.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 28.08.2026 Time : 14.30 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 28.08.2026 Time : 15.15 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed complaint
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North East, 10Km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : O/o. Sub Registrar, Chettikulam
முறைக் காவல் எண் முகவரி Madurai.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : C. Sundaramurugan (b) Father's/ Husband's Name : Chellaiah.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age 53 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Inspector (g) Address : O/o. Inspection Cell Officer,
தொழில் Cell Officer. முகவரி Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tr. G. Rajan, Assistant, Alanganallur SRO (I/c) Sub Registrar, Chettikulam Sub Registrar office, Madurai North and Six (6) others (Seperate sheet attached)

8. Reasons for delay in reporting by the complainant/ Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவுப்போன / சம்பந்தமான சொத்துக்களின் விபரம் (தேவைபெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved
களவுப்போன / சம்பந்தமான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவைபெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached separate sheet (pages 3 to 11)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
28/08/2026

15 Date & Time of despatch to the court: 28/08/2026
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 16.30 hrs

Name: பெயர் C. JEYAPRIYA
Rank: நிலை ..... No. எண் .....
Inspector of Police, VCAC, Madurai.

குற்றவாளிகளின் தொடர்ச்சி :

A2 திரு.N.முத்துமணி, வயது 31/2026,
த/பெ. நாகப்பன்,
IP Camera Operator (TCS Zigma),
செட்டிக்குளம் சார்பதிவகம்,
மதுரை (வடக்கு). (தனிநபர்)

A3 திரு.அருண்பாண்டி, வயது 26/2026,
த/பெ.பாண்டியன்,
கதவு எண்: 5/187-2 பள்ளிவாசல் வடக்குத் தெரு,
கணேஷ் நகர்,
கருப்பாயூரணி, மதுரை (தனிநபர்)

A4 திரு.உ.சிராஜுதீன், வயது 30/2026,
த/பெ.உபயத்துல்லா,
க.எண்: 1/222-10,
பத்மாவதி இல்லம், அல்லிமலர் வீதி,
சூர்யாநகர், மதுரை (தனிநபர்)

A5 திரு.M.சந்தோஷ் பாலாஜி, வயது 27/2026,
த/பெ.மாதவன்,
க.எண்:84/10, மஸ்தான்பட்டி,
வண்டியூர் மதுரை (தனிநபர்)

A6 திரு. க.வெங்கடேசன், வயது 37/2026,
த/பெ. கலியபெருமாள்,
க.எண்: 1/A செங்குன்றம் நகர் 10 வது தெரு,
திருப்பரங்குன்றம், மதுரை (தனிநபர்)

A7 திரு. M.N.V. பிரேம்குமார், வயது 58/2026,
த/பெ. வெங்கடாசலபதி,
க.எண்: 5/4/46, கலைநகர் 3வது தெரு,
மதுரை (தனிநபர்)

28/8/2026

காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மதுரை.

Honoured Sir,

Submitted,

இன்று 28.08.2026-ம் தேதி மதியம் 14:30 மணிக்கு, காவல் ஆய்வாளர் C. ஜெயப்பிரியா, ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திரு.C சுந்தரமுருகன் அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை வடக்கு பதிவு மாவட்டம் செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 27.08.2026, திடீர் இணை ஆய்வின் போது செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,86,500/-, கைப்பற்றப்பட்ட 10 ஆவணங்கள் மற்றும் செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வின் போது பதிவு செய்யப்பட்ட 11 வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர் C.சுந்தரமுருகன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண்.41/2026/I-2, நாள் : 28.08.2026 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - பதிவுத் துறை - மதுரை வடக்கு, செட்டிகுளம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் பொது மக்களிடம் பத்திர எழுத்தர்கள் மற்றும் உதவியாளர்கள் மூலமாக லஞ்சம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,86,500/- பணம் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று 27.08.2026-ம் தேதியன்று மதுரை மாவட்டம், செட்டிக்குளம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக வரும் பொது மக்களிடம் அவர்களது ஆவண எழுத்தர்கள் மற்றும் அவர்களது உதவியாளர்கள் மூலமாக லஞ்சம் கேட்டு வாங்குவதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.C.ஜெயப்பிரியா அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலை மதியம் 14.00 மணிக்கு எனக்கு தெரிவித்தார். பின்னர் நான் அந்த தகவலை விசாரித்து விட்டு மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை செய்யலாம் என கூறியதன் பேரில், நானும், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திருமதி.C.ஜெயப்பிரியா, திரு.P.M.ரமேஷ்பிரபு மற்றும் போலீஸ் பார்ட்டியினரும் அரசு காவல் வாகனம் TN 21 G 9009-ல் புறப்பட்டு, மதியம் 15:00 மணியளவில் செட்டிக்குளம் சார் பதிவாளர் அலுவலகம் அமைந்துள்ள ஊமச்சிக்குளம்

அலங்காநல்லூர் மெயின் ரோட்டில் செட்டிக்குளம் ஊராட்சி மன்ற அலுவலகத்திற்கு எதிரே தெற்கு நோக்கி செல்லும் ரோட்டின் கடைசியில் செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகம் வந்து, எதிரே உள்ள காலியிடத்தில் நிறுத்தியிருந்த கார்களின் அருகில் நின்று இரகசிய கண்காணிப்பு மேற்கொண்டோம். அப்பொழுது, மேற்படி அலுவலகம் பரபரப்பாக காணப்பட்டது. மேலும், மேற்படி அலுவலகத்தில் ஆவணங்களை பதிவு செய்வதற்காக ஆவண எழுத்தர்களின் உதவியாளர்கள் மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்காக பொதுமக்களிடமிருந்து அதிக பணம் பெறுவதாக கிடைத்த இரகசிய தகவலை உறுதி செய்த பின்பு, மதியம் சுமார் 15:15 மணியளவில் மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர்கள் திருமதி.C.ஜெயப்பிரியா, திரு.P.M.ரமேஷ்பிரபு மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் மேற்படி அலுவலகத்திற்கு உள்ளே சென்று அங்கே சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த திரு. G. ராஜன் அவர்களிடம் என்னையும், காவல் ஆய்வாளர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அறிமுகம் செய்த பின்னர் சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து அவரிடம் விபரம் தெரிவித்து அவரை விசாரித்ததில், அவர் தனது பெயர் G. ராஜன் என்றும், அவர் மதுரை (வடக்கு) அலங்காநல்லூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் என்றும், தற்போது பொறுப்பு சார்பதிவாளராக செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 20.07.2026-ம் தேதி முதல் பணிபுரிந்து வருவதாகவும், தற்போது மேற்படி அலுவலகத்தில், உதவியாளர் திரு.பாலமுருகன், இளநிலை உதவியாளர்கள் திரு.ராஜா, திருமதி.தாரணி மற்றும் IP Camera Operator திரு.முத்துமணி ஆகியோர் பணியில் இருப்பதாகவும், அவரது அலுவலகத்தில் வேலை பழு அதிகமாக இருப்பதால் அவரது வேண்டுகோளின்படி ஓய்வு பெற்ற உதவியாளர் திரு.ராமதாஸ் அவர்களை இன்றுமுதல் பணிக்கு அமர்த்தியிருப்பதாக தெரிவித்தார். பின்னர், மேற்படி பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன் அவர்களின் சம்மதத்தின் பேரில், மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. சோதனையின்போது மேற்படி அலுவலக ஹாலை தாண்டி தென்கிழக்கு பக்கம் புகைப்படம் எடுக்கும் அறையில் உதவியாளர் திரு.பாலமுருகன், இளநிலை உதவியாளர் திரு.ராஜா மற்றும் IP Camera Operator திரு.முத்துமணி ஆகியோர் பணியில் இருந்தார்கள். அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைகள், அவர்களின் டேபிள்கள் மற்றும் அவரது உடைமைகளை சோதனையிடப்பட்டது. மேற்படி திரு.பாலமுருகன் அவர்களின் கைவசம் வைத்திருந்த ரூ.600/- மற்றும் திரு.ராஜா அவர்களின் கைவசம் வைத்திருந்த ரூ.240/- குறித்து அவர்களிடம் விபரம் கேட்டபோது அவர்கள் அது அவர்களது செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் எனக் கூறி தகுந்த முகாந்திரம் கூறியதால் அதனை ஏற்று அவர்களின் பணம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் திரும்ப கொடுக்கப்பட்டது. அது குறித்து அலுவலக தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் சரிபார்க்க சரியாக இருந்தது. மேலும்,

மேற்படி அறையில் அமர்ந்து பணி செய்து கொண்டிருந்த IP Camera Operator திரு.முத்துமணி அவர்களின் கைவசம் வைத்திருப்பதாக கூறி அவரது பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸை எடுத்து அதிலிருந்த ரூ.3,740/- ஐ அவரது செலவிற்காக வைத்திருப்பதாக கூறி எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து மேற்படி அலுவலக தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் சரிபார்க்க அதில் அவர் அவரது அலுவலகத்திற்கு வந்தபோது ரூ.850/- மட்டும் கொண்டு வந்ததாக பதிவு செய்யப்பட்டிருந்தது. அவருடைய கூற்று ஏற்றுக் கொள்ளும்படி இல்லாததாலும், தகுந்த முகாந்திரம் கூறாததாலும் அவர் வைத்திருந்த பணம் ரூ.3,000/-த்தை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.சுந்தரமுருகன் அவர்கள் கைப்பற்றினார். அதுபோக அதிலிருந்த மீதி பணம் ரூ.740/-ஐ மட்டும் அவரிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த அறையில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்று கொண்டிருந்த M.N.V. பிரேம்குமார், வயது 58/2026, த/பெ. வெங்கடாசலபதி, க.எண்: 5/4/46, கலைநகர் 3வது தெரு, மதுரை என்பவரை விசாரிக்க அவர் மனைவி கலைவாணி பத்திர எழுத்தர் என்றும், அவரது அலுவலகம் ஊமச்சிகுளம் மிட்டாய் கம்பெனி அருகில் கலைவாணி பிரேம்குமார் என்ற பெயரில் உள்ளதாகவும், அவரது மனைவி தயார் செய்த பத்திரத்தை மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 5223/2026 பிரகாரம் பதிவு செய்ததாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்ய முயன்றபோது அவர் அவரது பேண்டின் வலது பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்ஸில் இருந்து எடுத்து ரூ.5,600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அதைபற்றி அவரிடம் விசாரித்தபோது அப்பணம் அவரது ATM கார்டு மூலமாக எடுத்ததாக தெரிவித்தார். மேற்படி பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால் அப்பணத்தில் ரூ.5000/- மட்டும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்படி புகைப்படம் எடுக்கும் அறைக்கு மேற்கு பக்கம் உள்ள அறையில் கிழக்கு திசை நோக்கி போடப்பட்டிருந்த மர டேபிளின் முன்பு சார்பதிவாளர் இருக்கையில் பணி செய்த திரு. ராஜன் அவர்களின் இருக்கை, அவருக்கு முன்பிருந்த மரமேசை, அதன் டிராயர்கள் மற்றும் அவரது உடைமைகளை சோதனையிட்டு, அவர் கைவசம் வைத்திருந்த பணம் ரூ.700/-யை குறித்து அவரிடம் விசாரித்த போது, அது அவரது சொந்த செலவுக்காக கொண்டு வந்திருந்த பணம் என்று தெரிவித்தார். அது குறித்து மேற்படி அலுவலக தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் சரிபார்க்க அது சரியாக காணப்பட்டது. பின்னர் சார்பதிவாளர் அறையில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் நின்றுகொண்டிருந்த திரு.அருண்பாண்டி, த/பெ.பாண்டியன், கதவு எண்: 5/187-2 பள்ளிவாசல் வடக்குத் தெரு, கணேஷ் நகர், கருப்பாயூரணி, மதுரை என்பவரை விசாரிக்க அவர் ஒத்தக்கடையில் உள்ள A.A. Document என்ற ஆவண எழுத்தாளர் அலுவலகத்தில் உதவியாளராக வேலை செய்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்தின் உரிமையாளர் திரு.ரமணி என்றும், அவர் தயார் செய்யும் பத்திரங்களுக்கு

வழக்கறிஞர் திரு.சாகுல்அகமது என்பவர் கையெழுத்திடுவார் என்றும், திரு.ரமணி கூறியதன் பேரில் அவர் மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு 2 பத்திரங்களை பதிவு செய்வதற்காக வந்ததாகவும், மேற்படி பத்திரத்தில் ஒன்று MOD என்றும் மற்றொரு பத்திரம் சம்பந்தப்பட்ட திருமதி.ஷோபனா அவர்கள் திரு.ரமணி அவர்களுக்கு மேற்படி பத்திரத்திற்கான ஆன்லைன் பேமெண்ட் சம்பந்தமாக கொடுக்க வேண்டிய ரூ.1,40,000/- இன்று அவரிடம் கொடுத்ததாகவும், அதனை அவர் ரமணி சார்பாக பெற்று ரமணியிடம் ஒப்படைப்பதற்காக அவரது ஜீன்ஸ் பேண்டின் வலது பக்க முன்பாக்கெட்டில் வைத்திருப்பதாக கூறி எடுத்து ஆஜர் செய்தார். ஆனால் மேற்படி MOD மற்றும் பத்திரத்திற்கு Online Payment ஏற்கனவே செலுத்தபட்டதாகவும் தெரிவித்தார். மேலும் அவர் தனது பேண்டின் இடது பாக்கெட்டில் ரூ.500/-ஐ அவரது சொந்த செலவிற்கு வைத்திருப்பதாக கூறி அதனையும் ஆஜர் செய்தார். அவரின் கூற்று ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததாலும், மேற்படி பணம் ரூ.1,40,000/- தகுந்த முகாந்திரம் கூறாததாலும், மேற்படி பணம் ரூ.1,40,000/-த்தை மட்டும் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கு சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்றுகொண்டிருந்த திரு.உ.சிராஜூதீன், த/பெ.உபயத்துல்லா, க.எண்: 1/222-10, பத்மாவதி இல்லம், அல்லிமலர் வீதி, சூர்யாநகர், மதுரை என்பவரை விசாரிக்க அவர் தான் வழக்கறிஞர் என்றும், அவரது அலுவலகம் அவுட்போஸ்ட் அருகில் உள்ளதாகவும், 27.08.2026 ஆம் தேதி மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு திரு.சூசை சகாயராஜ் என்பவருக்கான MOD பதிவு செய்வதற்காக அதற்குரிய ஆவணங்களை தயார் செய்து கையெழுத்திட்டு அதனை பதிவு செய்வதற்காக வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய முயன்றபோது அவர் தன்வசம் வைத்திருந்த ரூ.20,000/-த்தை அவரது பேண்டின் வலது பக்க முன்பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதைபற்றி அவரிடம் விசாரித்தபோது திரு.சூசைசகாயராஜ் அவர்கள் மேற்படி MOD சம்பந்தமாக கட்ட வேண்டிய ரூ.20,810/-த்தை ரொக்கமாக அவரிடம் கொடுத்துவிட்டதாகவும், அதற்குரிய Online Payment-ஐ அவரது வங்கி கணக்கின் Net Banking மூலமாக செலுத்திவிட்டதாகவும் தெரிவித்தார். மேலும், மேற்படி சிராஜூதீன் அவர்கள் அவரது பர்ஸிலிருந்து ரூ.1800/- ஐ தனது சொந்த செலவிற்கு வைத்து இருப்பதாக தெரிவித்து அதனை எடுத்து காண்பித்தார். மேற்படி சிராஜூதீன் அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளும்படி இல்லாததாலும், மேற்படி ரூ.20,000/-க்கு தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கு சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்றுகொண்டிருந்த M.சந்தோஷ் பாலாஜி, த/பெ.மாதவன், க.எண்:84/10, மஸ்தான்பட்டி, வண்டியூர் மதுரை என்பவரை விசாரிக்க அவர் தான் ஒத்தக்கடை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள மூவேந்திரன் டாக்குமெண்ட்ஸ்-ல் உதவியாளராக வேலை பார்த்து வருவதாகவும், மேற்படி அலுவலவகத்தின் உரிமையாளர் திரு.மூவேந்திரன் என்றும் அவர் வருகையில்லா ஆவணம்

ஒன்றை தயார் செய்தார் என்றும், அதற்குரிய Token No.TP/301439722/2026 என்றும், அதனை மேற்படி செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக அவர் வருகைபுரிந்ததாகவும், தெரிவித்தார். அவரை சோதனை செய்ய முயன்றபோது அவர் தன்வசம் வைத்திருந்த ரூ.12,000/-த்தை அவரது பேண்டின் வலது பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்ஸில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதைபற்றி அவரிடம் விசாரித்தபோது அப்பணம் அவர் சீட்டு கட்டுவதற்காக வைத்துள்ளதாக கூறினார். மேற்படி பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால் அப்பணம் என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கு சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் நின்றுகொண்டிருந்த க.வெங்கடேசன், த/பெ. கலியபெருமாள், க.எண்: 1/A செங்குன்றம் நகர் 10 வது தெரு, திருப்பரங்குன்றம், மதுரை என்பவரை விசாரிக்க அவர் தான் கடச்சனேந்தலில் உள்ள ஆவண எழுத்தர் திரு.செந்தில்குமார் என்பவரிடம் உதவியாளராக வேலை பார்த்து வருவதாகவும், 27.08.2026 ஆம் தேதி அவர் கொடுத்து அனுப்பிய திரு.வெங்கடேசன் என்பவருக்குரிய பத்திரத்தை பதிவு செய்வதற்காக மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ய முயன்றபோது அவர் அவரது பேண்டின் இடதுபக்க முன் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.6,500/-த்தை எடுத்து ஆஜர் செய்தார். மேலும் அவர் அவரது பேண்டின் வலது பின்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பர்ஸிலிருந்து ரூ.500/-ஐம் எடுத்து ஆஜர் செய்தார். அதைபற்றி விசாரித்தபோது மேற்படி ரூ.6500/- அவருக்கு வழங்கப்பட்ட வாரசம்பளம் என்றும், மேலும் ரூ.500/- தனது செலவுக்கு வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.6500/- விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவ்வலுவலக கணினி அறையில் அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திருமதி.தாரணி அவர்களின் உடைமைகள் சோதனையிடப்பட்டது. மேற்படி திருமதி.தாரணி அவர்களிடம் விசாரித்தபோது அவர் அவரது அலுவலகத்திற்கு 27.08.2026 ஆம் தேதியன்று பணிக்கு வந்தபொழுது ரூ.450/- கொண்டு வந்ததாகவும், அதனை தனது சாப்பாட்டிற்காக செலவு செய்துவிட்டதாக கூறி அவரிடம் கைவசம் பணம் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். அது குறித்து அவ்வலுவலக தனிநபர் பணஇருப்பு பதிவேட்டில் சரிபார்க்க அதில் அவர் கூறியபடி சரியாக இருந்தது. மேலும் மேற்படி அறையில் திருமதி.தாரணி அவர்களின் இருக்கைக்கு அருகில் மேற்கு பக்கம் அமர்ந்து அவருக்கு முன்பு இருந்த கணினியில் தட்டச்சு செய்துகொண்டிருந்த மேற்படி நபரை விசாரித்த பொழுது அவர் அவரது பெயர் ராமதாஸ் என்றும், அவர் மதுரை தல்லாகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணி செய்து ஓய்வு பெற்றதாகவும், மேற்படி பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன் அவர்கள் கேட்டுக்கொண்டதால் அவர் மேற்படி அலுவலகத்திற்கு 27.08.2026 ஆம் தேதியன்று காலை சுமார் 11.00 மணிக்கு வந்ததாகவும், மேற்படி திருமதி.தாரணி பணி செய்யும் மேற்படி அறையில் உள்ள கணினியில் மேற்படி அலுவலகம் சம்பந்தப்பட்ட தபால்களுக்கு

சார்பதிவாளர் கூறியபடி உரிய கடிதங்களை தட்டச்சு செய்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.250/- பணம் மட்டும் இருந்தது. அதைப்பற்றி விசாரித்தபோது மேற்படி பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக கூறி தகுந்த முகாந்திரம் கூறியதால் அப்பணம் கைப்பற்றபடவில்லை. மேலும், மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களான உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன், உதவியாளர் திரு.பாலமுருகன், இளநிலை உதவியாளர்கள் திரு.ராஜா, திருமதி.தாரணி மற்றும் IP Camera Operator திரு.முத்துமணி, தனிநபர்கள் திரு. அருண்பாண்டி, திரு.சிராஜுதீன், திரு.சந்தோஷ்பாலாஜி, திரு.வெங்கடேசன் மற்றும் திரு.பிரேம்குமார் ஆகியோரிடம் நான் தனித்தனியாக விசாரணை செய்து அவர்களது கைப்பேசி ஆய்வு செய்யப்பட்டு, பின்னர் அவர்களது எழுத்துப்பூர்வமான வாக்குமூலங்களை பெற்றேன். பின்னர் நான், திரு.ராஜன் அவர்களிடம் சார்பதிவகத்தில் 27.08.2026 ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்து விசாரித்த போது, அன்றைய தினத்தில் மொத்தம் 86 டோக்கன்கள் அவர்களுடைய அலுவலகத்தில் பதிவுக்காக போடப்பட்டதாகவும், அதில் மொத்தம் 77 ஆவணங்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டதாகவும், மேற்படி ஆவணங்களின் பதிவிற்கான கட்டணங்கள் அனைத்தும் ஆன்லைன் மூலமாக செலுத்தப்பட்டுள்ளது என்றும், அவரது அலுவலகத்தில் அன்றைய தினம் ரொக்கமாக நேரில் யாரும் பணம் ஏதும் செலுத்தவில்லை என்றும், அவரது அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பத்திர பதிவு மற்றும் இதர பதிவுகளுக்கான பணத்தை ஆன்லைனில்தான் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும், மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தின் பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன் அவர்கள், என்னிடம் அலுவலக நிமித்தமாக சார்பதிவாளரால் அழைக்கப்பட்டால் தவிர அலுவலகத்திற்குள் ஆவணம் எழுதுபவர்கள் நுழைய கூடாது என்ற விதியினை சார்பதிவாளர்கள் கண்டிப்பாக நடைமுறைபடுத்த வேண்டும் என தங்களது உயரதிகாரிகளின் சுற்றறிக்கை உள்ளது என்றும், அவர் 27.08.2026 ஆம் தேதியன்று நடந்த பத்திர பதிவுகள் சம்பந்தமாக ஆவண எழுத்தர்களோ அல்லது அவர்கள் சம்பந்தப்பட்டவர்களையோ அலுவல் நிமித்தமாக அழைக்கவில்லை என தெரிவித்தார். மேலும் இதுசம்பந்தமான சுற்றறிக்கை எண்.5/2023 என்றும் அது பதிவுத்துறை தலைவர் அவர்களால் வெளியிடப்பட்டது என்றும் தெரிவித்தார். மேலும், இந்த திடீர் இணை ஆய்வின் போது விசாரணைக்காக கேட்டுக்கொண்டதன் பேரில், பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன் அவர்களின் உத்தரவின் பேரில், இளநிலை உதவியாளர் திரு.ராஜா அவர்கள் கணிணியிலிருந்து பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்த 1) Photocopy of Year 2026 Month August Account A Chettikulam (Madurai North) Date From : 27-Aug-2026 To : 27-Aug-2026, Sub Registrar Office, Chettikulam (பக்கம் 1 முதல் 6), 2) Photocopy of Year 2026 Month August Section 41 Chettikulam (Madurai North) Date From : 27-Aug-2026 To : 27-Aug-2026, Sub Registrar Office, Chettikulam (பக்கம் 1 மற்றும் 2), 3)

Photocopy of Year 2026 Month August Account H Chettikulam (Madurai North) Date From : 27-Aug-2026 To : 27-Aug-2026, Sub Registrar Office, Chettikulam (பக்கம் 1) ஆகிய ஆவணங்களையும், பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன் அவர்கள் ஆஜர் செய்த 4) செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலக தாமத வருகைப் பதிவேடு 01.01.2026 - பக்கம் 1 முதல் 8, 5) செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலக வருகைப் பதிவேடு 01.01.2026 - பக்கம் 1 முதல் 8, 6) செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலக தணிக்கை வருகைப் பதிவேடு 01.01.2026 - பக்கம் 1 முதல் 13, 7) செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலக தனிநபர் பண இருப்பு பதிவேடு 01.01.2026 - பக்கம் 1 முதல் 30, 8) செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலக TCS staff பணியாளர்களின் வருகைப் பதிவேடு - பக்கம் 1 முதல் 8, 9) செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலக இயக்க பதிவேடு 01.01.2026 - பக்கம் 1 முதல் 4, 10)செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலக தற்செயல் விடுப்பு பதிவேடு 01.01.2026 ஆகிய 10 ஆவணங்களை நான் கைப்பற்றினேன். மேற்சொன்ன பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் திடீர் இணை ஆய்வின் போது, தகுந்த முகாந்திரம் கூறாமல் சந்தேகப்படும்படி வைத்திருந்த பணம் ரூ.1,86,500/-ம் ஆகியவற்றை நான் கைப்பற்றினேன். மேற்படி 7 பதிவேடுகள், 3 ஆவணங்கள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,86,500/-, செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து 27.08.2026 ஆம் தேதி 15.15 மணி முதல் 21.00 மணி வரை தயார் செய்யப்பட்ட திடீர் இணை ஆய்வு செயல்முறை குறிப்பு மற்றும் செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலக பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன், உதவியாளர் திரு.பாலமுருகன், இளநிலை உதவியாளர்கள் திரு.ராஜா, திருமதி.தாரணி, IP Camera Operator திரு.முத்துமணி, தனிநபர்கள் திரு.அருண்பாண்டி, திரு.சிராஜூதீன், திரு.சந்தோஷ்பாலாஜி, திரு.வெங்கடேசன் திரு.பிரேம்குமார் மற்றும் திரு.G.ராமதாஸ் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் இணைத்து செட்டிகுளம் சார்பதிவாளர் அலுவலக பொறுப்பு சார்பதிவாளர் திரு.ராஜன், IP Camera Operator திரு.முத்துமணி, தனிநபர்கள் திரு.அருண்பாண்டி, திரு.சிராஜூதீன், திரு.சந்தோஷ்பாலாஜி, திரு.வெங்கடேசன் மற்றும் திரு.பிரேம்குமார் ஆகியோர்கள், மேலே சொன்னவாறு பத்திரபதிவு அலுவலகத்தில் பயனாளிகளை தவிர பத்திர எழுத்தர் மற்றும் அவரது உதவியாளர்கள் மற்றும் சம்பந்தமில்லாத நபர்கள் மற்றும் இடைத்தரகர்கள் இருக்கக்கூடாது என்றிருக்கும்போது, தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்காமல் தங்களுக்கு சாதகமாக மற்றும் பத்திரம் பதிய சந்தேகம்படும்படி இருந்தமைக்கு மேற்படி நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த அறிக்கையை அளிக்கிறேன். ஒம்/- XXXXX (C.சுந்தரமுருகன்), மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்டம். இணைப்பு : 1) திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள். 27.08.2026. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,86,500/-. 3) செட்டிகுளம் சார்-பதிவாளர் அலுவலகத்தில் கைப்பற்றப்பட்ட 10 ஆவணங்கள். 4) 11 வாக்குமூலங்கள்.

Sir, Received this report today (28.08.2026) at 14.30 hrs alongwith Joint Surprise Check Proceedings dated 27.08.2026, Cash Rs. 1,86,500/-, eleven Statements, 7 Registers and 3 Print out documents. After obtaining permission from the Superior Officers, I registered a case in Madurai V&AC Crime No.11/2026 u/s 7, 7A of PC Act as amended by the PC (Amendment) Act 2018 and 106 BNSS Act on 28.08.2026 at 15.15 hrs. Sd/- XXXXX 28.08.2026 (C. JEYAPRIYA), Inspector of Police, V&AC, Madurai.

The original FIR along with report of Tr.C.Sundaramurugan, Joint Surprise Check Proceedings Dated : 27.08.2026 and 11 statements are submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Madurai and other copies were sent to the officers concerned.

C. Jeyapriya 28/8/2026
(C. JEYAPRIYA)
Inspector of Police,
V&AC, Madurai.